தினமணி

**மரக்கன்றுகள் வழங்கும் விழா**

First Published : 23 May 2010 09:24:02 AM IST

புதுச்சேரி மே 22:  ராஜீவ்காந்தி நினைவு தினத்தையொட்டி மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடந்தது.

முதலியார்பேட்டை வட்டார காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் அங்குள்ள கட்சி அலுவலகம் எதிரில் ராஜீவ்காந்தி படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அன்னதானம் வழங்கப்பட்டது.

காங்கிரஸ் மாநில பொதுச் செயலர் கே. பாண்டியன் தலைமை வகித்தார். மத்திய அமைச்சர் வி.நாராயணசாமி, முதல்வர் வி. வைத்திலிங்கம், காங்கிரஸ் தலைவர் ஏ.வி. சுப்பிரமணியன் உள்ளிட்டோர் மரக்கன்றுகள் வழங்கினர்.

வட்டார காங்கிரஸ் தலைவர் பி. தங்கமணி, மாவட்ட பொதுச்செயலர் எஸ்.பி. குமார், கவுன்சிலர்கள் மஞ்சினி, செல்வகணபதி, தேவேந்திரகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**காவிரி டெல்டா பகுதிகளில் சம்பாவுக்குப் பின் உளுந்து சாகுபடி: ஆட்சியர், பொதுப்பணி துறை ஆதரவு; வேளாண் துறை எதிர்ப்பு**

First Published : 23 May 2010 12:00:00 AM IST

கடலூர், மே 21: காவிரி டெல்டா பகுதிகளில் சம்பா நெல் அறுவடைக்குப் பின், தனிப் பயிராக உளுந்து பயிரிட வேண்டும்; அதற்கு வீராணம் ஏரியில் இருந்து 2 அடி தண்ணீர் கொடுத்தால் போதும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கு, மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் ஆதரவு தெரிவித்தார். பொதுப்பணித்துறை தண்ணீர் வழங்கத் தயார் என்று தெரிவித்தது. தொழில்நுட்பப் பிரச்னை உள்ளது என்று கூறி, வேளாண் துறை எதிர்ப்பு தெரிவித்தது.

÷கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம் மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடந்தது.

÷கூட்டத்தில் பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் பேசியது:

÷காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் சம்பா அறுவடைக்கு 15 தினங்களுக்கு முன், ஊடுபயிராக உளுந்து விதைக்கப்படும். கைகளால் நெல் அறுவடை செய்யும்போது உளுந்து பயிரை விலக்கிவிட்டுவிட்டு அறுவடை செய்தனர். பின், உளுந்து தண்ணீர் இல்லாமலேயே பனியில் வளர்ந்து நல்ல மகசூல் கொடுக்கும். ஆனால், தற்போது நெல் அறுவடை இயந்திரமயமாகி விட்டதால், நிலம் காய்ந்த பிறகே அறுவடை இயந்திரம் வயலுக்குள் செல்ல முடியும். அப்போது முளைத்து இருக்கும் உளுந்து பயிரை, அறுவடை இயந்திரம் அழித்து விடும். கடந்த 3 ஆண்டுகளாக டெல்டா பகுதிகளில் உளுந்து மகசூல் இல்லை.

÷எனவே சம்பா அறுவடைக்குப் பின், ஒருமுறை தண்ணீர் (வீராணம் ஏரியில் இருந்து 2 அடி நீர்) விட்டால் போதும். அதைக்கொண்டு உளுந்து சாகுபடியை நிறைவு செய்ய முடியும். இந்த ஆண்டு கடலூர் மாவட்டத்தில் டெல்டா விவசாயிகள் 2 ஆயிரம் பேர், இந்த முறையில்  உளுந்து சாகுபடி செய்து 3 மாதத்தில் ஏக்கருக்கு ரூ.2,585 லாபம் அடைந்து உள்ளனர். எனவே வரும் ஆண்டு முதல் இத்தகைய உளுந்து சாகுபடிக்கு தண்ணீர்தர அரசு உத்தரவிட வேண்டும் என்றார் ரவீந்திரன்.÷பதில் அளித்து மாவட்ட ஆட்சியர் பேசுகையில், இது வரவேற்கத்தக்க திட்டம். இதற்கு தண்ணீர் வழங்க பொதுப் பணித்துறை தயாராக உள்ளதா என்று கேட்டார். 2 அடி தண்ணீர் வழங்க முடியும் என்று பொதுப்பணித்துறை

அதிகாரிகள் பதில் அளித்தனர். ஆனால் வேளாண் இணை இயக்குநர் இளங்கோ பேசுகையில், தனியாக உளுந்து பயிரிடுவதில் தொழில் நுட்பப் பிரச்னை உள்ளது. இதை ஏற்க முடியாது. ஆய்வு செய்து பார்க்க வேண்டும் என்றார்.÷அடுத்துப் பேசிய மாவட்ட ஆட்சியர், இத்திட்டம் அரசுக்குப் பரிந்துரைக்கப்படும். சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுடன் பேசுவேன் என்றார்.

**கடலூரில் வஞ்சரம் மீன் கிலோ ரூ.500**

First Published : 24 May 2010 12:00:00 AM IST



கடலூர் துறைமுகத்தில் கரை இறங்கும் மத்தி மீன்கள்.

கடலூர்,மே 23: கடலூரில் மீன்கள் விலை கிடுகிடு என உயர்ந்து விட்டது.

÷கடலூர் மாவட்டத்தில் ஏப்ரல் 15 முதல் மீன்பிடி தடைகாலம். மே 31-ம் தேதி வரை இந்தத் தடை நீடிக்கும்.

÷மீன்பிடித் தடைகாலத்தில் இழுவலை பொருத்தப்பட்ட பெரிய இயந்திரப் படகுகள் மீன் பிடிக்க அனுமதி கிடையாது.

÷ஆனால் கட்டுமரங்கள், சிறிய படகுகள், கண்ணாடி இழைப் படகுகள் மீன்படிக்கத் தடை இல்லை.

÷சிறிய படகுகள் மட்டுமே மீன்பிடிப்பதால், மீன்கள் மிகக்குறைந்த அளவே மார்க்கெட்டுகளுக்கு வருகின்றன. இதனால் மார்க்கெட்டில் மீன்கள் விலை, முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு அபரிமிதமாக உயர்ந்து விட்டது.

÷கடந்த 2 மாதங்களுக்கு முன்பு வரை குறைந்த விலை மீன்களான சூடை, கானாங்கத்தை, கவலை, காரல், தேங்காப் பாறை, வெள்ளை கெழங்கான் போன்ற சாதாரண ரக மீன்கள், கிலோ ரூ. 80 முதல் ரூ. 100 வரை இருந்தது.

÷நடுத்தர ரகங்களான சங்கரா, கெண்டல், கருப்புக் கிழங்கான், வாளை போன்ற மீன்கள் கிலோ ரூ. 130 வரை இருந்தது. கொடுவா, வாவல், வஞ்சரம் போன்ற உயர்ரக மீன்கள் கிலோ ரூ. 250 வரை இருந்தது. இறால் கிலோ ரூ. 150 ஆக இருந்தது.

÷மீன்பிடித் தடைகாலம் தொடங்கியதும் மீன்கள் விலை கிடுகிடு என உயரத் தொடங்கி விட்டது. ஞாயிற்றுக்கிழமை கடலூர் திருப்பாப்புலியூர் பான்பரி மார்க்கெட்டில் மீன்கள் விலை, அபரிமிதமாக உயர்ந்தது.

÷சூடை, கானாங்கத்தை, காரல், தேங்காப்பாறை, வெள்ளை கெழங்கான் போன்ற சாதாரண ரக மீன்கள் விலை, கிலோ ரூ. 150 ஆக உயர்ந்து இருந்தது. கருப்புக் கிழங்கான். சங்கரா, கெண்டல் போன்ற நடுத்தர ரக மீன்கள் விலை கிலோ ரூ. 200 வரை இருந்தது.

÷கொடுவா, வாவல் போன்ற மீன்கள் கிலோ ரூ. 350 ஆகவும், வஞ்சரம் மீன் கிலோ ரூ. 500 ஆகவும் உயர்ந்து விட்டது. இறால் விலை கிலோ ரூ. 200 முதல் ரூ. 250 ஆக உயர்ந்து இருந்தது.
÷ஆட்டு இறைச்சி கிலோ ரூ. 280 ஆக உள்ளது. இதையடுத்து மீன்களின் விலை அதிகரித்து இருப்பது, பொதுமக்கள் பெரிதும் அதிர்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது.
÷மீன் சாப்பிடுவதால் உடலுக்கு புரோட்டீன் சத்தும் வைட்டமின்கள் ஏ மற்றும் பி சத்துகள் அதிகம் கிடைக்கின்றன. மீன்கள் விலையோ, சாதாரண மக்கள் வாங்கும் நிலையில் இல்லாமல் விண்ணைத் தொடும் அளவுக்கு உயர்ந்து வருகிறது.
÷ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் தமிழகத்தின் உள்பகுதிகளில் இருந்தும், ஆலைக் கழிவுகளை கடலிலும், கடலை அடுத்துள்ள உப்பனாற்றிலும் கலந்து விடுவதற்கு ஏதுவாக, நிலத்தடி நீரை பெருமளவுக்கு உறிஞ்சுவதற்கு வசதியாக, இந்த ரசாயனத் தொழிற்சாலைகள் எல்லாம் கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.
÷தமிழகத்தின் கடல்வளம் பெருமளவுக்கு அழிந்து வருவதால், மக்களுக்கு குறைந்த விலையில் சிறந்த சத்துக்கள் நிறைந்த உணவான மீன்கள் கிடைக்காத அவல நிலைக்கு, மக்கள் தள்ளப்பட்டு வருகிறார்கள்.
÷மீன்கள் விலை உயர்வு குறித்து, மாவட்ட மீனவர் பேரவைத் தலைவர் சுப்புராயன் கூறியது:
÷விலை உயர்வுக்கு மீன்கள் பற்றாக்குறையே காரணம். மீன்பிடி தடை இருப்பதால் ஆழ்கடல் மீன்கள் வரத்து இல்லை. சிறிய படகுகள் கடலில் 5 கி.மீ. தூரம் வரைதான் செல்லும்.
÷அந்தப் பகுதிகளில், தொழிற்சாலை ரசாயனக் கழிவுகளால் மீன்வளம் பெரிதும் குறைந்து விட்டது.
÷கடலூரில் அதிகம் பிடிபடும் மத்தி மீன்களும் குறைவாகக் கிடைக்கின்றன. கடலூருக்கு பிறமாநிலங்களில் இருந்து மீன்கள் 10 தினங்களாக வரத் தொடங்கி இருக்கின்றன.
÷நாளொன்றுக்கு 100 லாரிகளில் வெளிமாநிலங்களுக்கு மீன்களை ஏற்றுமதி செய்த கடலூர், இன்று பிற மாநில மீன்களை நம்பி இருப்பது வேதனை அளிக்கிறது என்றார் சுப்புராயன்.

**பொய்யுண்டார்கோட்டையில் கரும்பு சாகுபடி கருத்தரங்கு**

First Published : 23 May 2010 02:08:15 PM IST

தஞ்சாவூர், மே 22:அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையின் மருங்குளம் கோட்டம் சார்பில், பொய்யுண்டார்கோட்டை கிராமத்தில் கரும்பு சாகுபடி கருத்தரங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
கருத்தரங்கில் ஆலையின் தலைமை நிர்வாகி பி. மாணிக்கம் பேசும்போது, 2010-11 ஆம் ஆண்டு நடவுப் பருவத்திற்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 2,000 வழங்கப்படும் என்றார்.தொடர்ந்து, கரும்பில் மகசூல் அதிகப்படுத்துவது, பூச்சிநோய் கண்காணிப்பு குறித்து அவர் பேசினார்.
கரும்பு அலுவலர் ஆர். தென்னரசு பேசும்போது, கரும்பில் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் ஏக்கருக்கு 80 முதல் 100 டன் வரை மகசூல் பெறும் வழிவகைகள் குறித்து படக்காட்சிகளுடன் விளக்கமளித்தார்.
கருத்தரங்கில் வேளாண் பொறியாளர் ஆர். கணேசன், கரும்பு உதவியாளர் கே. கொளஞ்சி, கரும்பு விவசாயிகள் பி. மதியழகன், டி. புண்ணியமூர்த்தி, ஆர். திருப்பதி, பி. கருணாமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பாரம்பரிய விவசாயம் காக்க மண் கொட்டும் போராட்டம் : வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அறிவிப்பு**

திருத்துறைப்பூண்டி: ""இந்திய பாரம்பரிய விவசாயத்தை காக்க வலியுறுத்தி அக்டோபர் இரண்டாம் தேதி காந்தி ஜெயந்தி அன்று நாடாளுமன்றம் முன் மண் கொட்டும் போராட்டம் நடத்தப்படும்,'' என இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அறிவித்தார்.

திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கத்தில் மாநில அளவிலான நெல் திருவிழா நடந்தது. இதைதொடர்ந்து விவசாயிகள் பங்கேற்ற பேரணி மற்றும் பொதுக்கூட்டம் திருத்துறைப்பூண்டியில் நடந்தது. வேதாரண்யம் பைபாஸ் ரோடு அருகே விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் ஆறுபாதி கல்யாணம், தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு இயக்க தலைவர் ராமையா, முத்துப்பேட்டை நெல் உற்பத்தியாளர் சங்க தலைவர் ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் விவசாயிகள் பங்கேற்ற பேரணியை காவிரி டெல்டா விலைபொருள் உற்பத்தியாளர் சங்கம் ரெங்கநாதன் துவக்கி வைத்தார்.

இயற்கை விவசாயத்தை காப்போம். ரசாயன உரத்தையும், அன்னிய நிறுவனங்களின் மான்சாண்டோ விதைகளையும் ஒழிப்போம் என்ற குரலுடன் முக்கிய வீதிகள் வழியாக பேரணி தெற்கு வீதியை வந்தடைந்தது.

விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் சேரன், பொருளாளர் பாலகிருஷ்ணன், காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுச் செயலாளர் காவேரி தனபாலன் வரவேற்றார். "நமது நெல்லை காப்போம்' மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன், உழவரும் நுகர்வோரும் என்ற தலைப்பில் பேசினார்.

தேசிய ஒருங்கிணைப்பாளர் உஷா பேசுகையில், ""அன்று முன்னோர்கள் பாரம்பரியமாக சில நெல் வகைகளை நமது தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப உருவாக்கி தந்தார்கள். அது மழை, வெள்ளம், வெயிலுக்கு ஏற்ப நமக்கு நல்ல மகசூலை தந்தது. அன்னிய கம்பெனிகள் கோதுமையை கொடுத்தார்கள். பின் ரசாயன உரத்தை கொட்டினர். ""அதன் விளைவாக மண் மலடாகிப்போனதுடன், பல்வேறு நோய்களுக்கும் ஆளாகிப்போனோம். இதை மறந்து மீண்டும் இயற்கையோடு முன்னோர்கள் வகுத்துக்கொடுத்த பாதையில் மீண்டும் ஒரு சுதந்திரத்தை பெற பயணத்தை துவக்கிவிட்டோம். இனி நம்மாழ்வார் காட்டிய வழியில் சென்று வெற்றி பெறுவோம்,'' என்றார்.

பொதுக்கூட்டத்துக்கு தலைமை வகித்து இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதாவது: கடந்தாண்டு நமது விவசாயத்தை காக்கவும், மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகளை திரட்டி பார்லிமென்ட் முன் நெல்மணிகளை குவித்தோம். அரசு விழித்துக் கொள்ளவில்லை. எனவே, அக்டோபர் இரண்டாம் தேதி நமது வயல்களில் உள்ள மண்ணை ஒவ்வொரு விவசாயியும், ஒரு கிலோ அளவுக்கு எடுத்துச் சென்று பார்லிமென்ட் முன், "இந்திய பாரம்பரிய விவசாயம் காணாமல் போய், மண் மலடாகிவிட்டது. பாரம்பரிய விவசாயத்தை காக்க வலியுறுத்தி மண்ணை கொட்டி காந்திய அறவழியில்,' நமது எதிர்ப்பை தெரிவிப்போம். நவீன விவசாயத்தால் ரசாயன, பூச்சிக்கொல்லி மருந்தாலும், ஆலைகளில் இருந்து வரும் புகையாலும், வாகனங்களில் இருந்து வரும்

புகையாலும் 35 சதவீதம் பூமி சூடாவதற்கான காரணமாகிவிட்டது. காடுகள் அழிக்கப்பட்டதன் விளைவாக, மழை பெய்யும் காலமும் மாறி போதுமான மழையில்லை. காடு வளர்ப்பில் மக்களின் பங்கேற்பு இல்லை. மக்களின் பங்கேற்பு இருந்தால்தான், பூமி சூடாவதை தடுக்க வழிவகைகளை மேற்கொள்ள முடியும். கோதுமையை தந்து, மழைக்காத மக்காச்சோளத்தை தந்து, நமது இந்திய விவசாயிகளை ஏமாற்றும் வித்தையை இனியும் அனுமதிக்கக்கூடாது. மான்சாண்டோ விதைகளை வரும் காலங்களில் விற்பனை செய்தால், அதை பறிமுதல் செய்து கொளுத்தும் போராட்டத்தைத்தான் அன்று வெள்ளையனை வெளியேற்ற காந்தியடிகள் கூறிய அன்னிய துணிகளை எரித்தது போல மான்சாண்டோ விதைகளை எரிக்கும் போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபடுவார்கள். விவசாயிகள் ஓரணியில் திரண்டு இயற்கை விவசாயத்தை மேற்கொண்டு நோய், நஞ்சு இல்லாத உணவை மக்களுக்கு வழங்க ஒரே நோக்கத்தில் செயல்படுவோம். இவ்வாறு அவர் பேசினார். காவிரி விவசாயிகள் பாதுகாப்புச்சங்க செயலாளர் கண்ணப்பன் நன்றி கூறினார்.

**ரூ.35 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில் 1,225 குவிண்டால் பருத்தி 35 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்துக்கு டி.சி.ஹெச்., ரக பருத்தி 750 மூட்டைகள், ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி 2,500 மூட்டைகள், கொட்டு பருத்தி 250 மூட்டைகள் என 3,500 பருத்தி மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.ஹெச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 4,649 ரூபாயும், குறைந்த பட்சமாக 4,419 ரூபாயும், ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 3,429 ரூபாயும், குறைந்தபட்சமாக 3,069 ரூபாயும், கொட்டு பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 2,580 ரூபாயும், குறைந்தபட்சமாக 1,420 ரூபாய்க்கு ஏலம் போனது. 3,500 பருத்தி மூட்டைகள் கொண்ட 1,225 குவிண்டால் பருத்தி 35 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**கோடை உழவு செய்து மண் வளத்தை பாதுகாக்க விவசாயிகளுக்கு அழைப்பு**

புதுக்கோட்டை: கோடை உழவு செய்து மண் வளத்தை பாதுகாக்குமாறு விவசாயிகளுக்கு வேளாண்த்துறை இணை இயக்குனர் பழனியப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
புதுக்கோட்டை மாவட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக இந்த ஆண்டு மே மாதத்தில் 85 மி.மீ., மழை பெய்துள்ளது. கோடை சீசனில் மழை பெய்துள்ளதால் மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. மேலும் விளை நிலங்கள் அனைத்தும் ஈரப்பதத்துடன் உள்ளதால் கோடை உழவு செய்ய இவை ஏற்ற தருணமாகும். கோடை உழவு மண் வளத்தை அதிகரிக்கச் செய்வதோடு, களைகள் மற்றும் பூச்சி தாக்குதல்களை கட்டுப்படுத்தவும் ஏதுவாகும். குறுவை சாகுபடி விரைவில் துவங்கவுள்ள நிலையில் விவசாயிகளுக்கு தேவையான நெல் விதைகள் வேளாண் விரிவாக்க மையங்களில் போதியளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவற்றை தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம். சான்று பெற்ற உயர் விளைச்சல் நெல் விதைகள் ஒரு கிலோ ஐந்து ரூபாய் வீதமும், வீரிய ஒட்டு ரக நெல் விதைகள் ஒரு கிலோ ரூ.20 வீதமும் மானியத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இதுபோன்று நெல் நுண்சத்து, சிங்சல்பேட் மற்றும் வசம்பு, தூள் மருந்து உள்ளிட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை 50 சதவீத மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்புகொண்டு இவற்றை விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**விதை மூடையை தரையில் அடுக்கினால் முளைப்பு திறன் குறைமென எச்சரிக்கை**

தஞ்சாவூர்: ""விதை மூடைகளை வெற்றுத்தரையில் அடுக்கி வைத்தால் அதன் முளைப்பு திறன் பாதிக்கும்," என தஞ்சை விதைச்சான்று உதவி இயக்குனர் ஞானசேகரன் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:
விவசாயிகள் பயறு விதைகளை தானியத்துக்காகவும், விதைக்காகவும் சேமிப்பது உண்டு. விதைகளை பூசானக் கொல்லி மருந்து கலந்து சேமித்தால் அவற்றை தானியத்துக்காக பயன்படுத்த முடியாது. மருந்து கலந்து சேமிக்காவிட்டால் விதைகள் பயறு வண்டுகளால் பாதிக்கப்படும். எனவே, விதைகளை தானியத்துக்காகவும், விதைக்காகவும் சேமிக்க வேண்டும் எனில் அவற்றை ஊக்குவிக்கப்பட்ட களிமண் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைக்காக பயன்படுத்தும் பயறு வகை பத்து முதல் எட்டு சத ஈரப்பதம் வரை காய வைக்க வேண்டும். அதன்பின், ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் காப்டான் பூசனக்கொல்லி மருந்துடன் விதை நேர்த்தி செய்து சேமிக்க வேண்டும். விதைகளை கிடங்குகளில் சேமித்து வைக்கும்போது சாக்குப்பைகளை ஒன்றின் மேல் ஒன்றாக ஆறு வரிசைக்கு மேல் அடுக்காமல் இருக்க வேண்டும்.
அதிகப்பட்சமாக அடுக்கினால் மேலே உள்ள மூடைகளின் பாரம் அடியிலுள்ள மூடைகளை போட்டு அழுத்துவதால் அடி மூடைகளில் உள்ள விதைகளின் முறைப்புத்திறன் பாதிக்கும். விதை மூடைகளை வெறும் தரையின் மேல் அடுக்கி வைப்பதை தவிர்க்க வேண்டும். இதனால், தரை மற்றும் சுவற்றில் உள்ள ஈரப்பதம் விதைகளில் ஊடுருவி முளைக்கும் திறனை பாதிக்கும். விதை மூடைகளை மரக்கட்டையின் மீது அல்லது தார்ப்பாய்களின் மீது அடுக்கி வைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**வறட்சியின் பிடியில் விவசாய நிலங்கள் 20 சதவீதம்... மழை பொய்த்ததால் விளைச்சல் சரிவு**

சிவகங்கை: மாவட்டத்தில் கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால், நெல் விளைச்சலில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் நடத்திய ஆய்வில், 20 சதவீத நிலங்கள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளது தெரியவந்துள்ளது. மாவட்டத்தில் வைகை மற்றும் கண்மாய் பாசனம் மூலம், சராசரியாக 89 ஆயிரம் எக்டேரில் நெல் நடவு செய்யப் படுகிறது.

இது தவிர 2,400 எக்டேரில் சிறு தானியம்; 1,700 எக்டேரில் பயறு வகை; 4,200 எக்டேரில் எண்ணெய் வித்து; 2,000 எக்டேரில் பருத்தி; 5,500 எக்டேரில் கரும்பு பயிரிடப்படும். ஆண்டு தோறும் அக்டோபரில், வடகிழக்கு பருவ மழை துவங்கும். இதை நம்பி விவசாய பணிகள் ஜரூராக நடக்கும். ஏமாற்றம்: கடந்த ஆண்டு மழை பொய்த்ததால், நெல் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை.

இதனால், சாகுபடி பரப்பு 71 ஆயிரம் எக்டேராக குறைந்தது. பெய்த சிறு மழைக்கு பின் தாமதமாக நடவு செய்த விவசாயிகள், கண்மாயில் நீர் இன்றி பயிரை காப்பாற்ற முடியாமல் தவித்தனர். குறிப்பாக மானாமதுரை, இளையான்குடி பகுதியில் நெல் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. நெல் சாகுபடியில், தோராயமாக ஒரு எக்டேருக்கு 3,000 கிலோ நெல் கிடைக்க வேண்டும்.

ஆனால், நடப்பு ஆண்டு குறைந்த அளவே கிடைத்துள்ளது. வறட்சி நிவாரணம் வழங்க கோரி விவசாயிகள் வலியுறுத்தினர். பாதிப்பு: இதன்படி, மாவட்டத்தில் வருவாய், விவசாய துறையினர் இணைந்து ஆய்வு நடத்தினர். இதில் 20 ஆயிரம் எக்டேர் வறட்சியால் பாதிக்கப்பட்டது தெரியவந்தது. மானாமதுரை, இளையான்குடி தாலுகாவில் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதை உறுதி செய்தனர். ஒட்டு மொத்தமாக மாவட்டத்தில், 20 சதவீத நிலங்கள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளன.

நிவாரணம்: கடந்த ஆண்டு வறட்சிக்கு இடையே, நடப்பு ஆண்டில் நெல் உற்பத்தி எப்படி இருக்கும் என, கேள்வி எழுந்துள் ளது. ஆண்டுதோறும், பயிர் காப்பீடு திட்டத்தில், விவசாயிகளுக்கு இழப் பீடு வழங்கப்படுகிறது. இதனால், அரசின் நிவாரணம் கிடைக்குமா என்ற சந்தேகம் நிலவுகிறது.

விவசாய துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,நெல் நடவு செய்த நிலத்தில் 50 சதவீதம் வரை பாதிப்பு இருந்தால் மட்டுமே, நிவாரணம் கிடைக்கும். ஆனால், மாவட்டத்தில் 20 சதவீத பாதிப்பு தான் ஏற்பட்டுள்ளது. பயிர் காப்பீடு தொகையை விவசாயிகள் பெறலாம். வறட்சி நிவாரணத்தை அரசு தான் அறிவிக்க வேண்டும்," என்றார்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் புகார் செயயலாம்**

தேனி: உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் விவசாயிகள் புகார் செய்யலாம் என கலெக்டர் முத்துவீரன் தெரிவித்தார். அவர் கூறுகையில், உரங்கள் கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

உரங்களை என்ன விலைக்கு விற்க வேண்டும் என மூடையிலேயே விலை அச்சிடப்பட்டு உள்ளது. கூடுதல் விலைக்கு யாராவது விற்றால் அவர்களை பற்றி விவசாயிகள், விவசாயத்துறை இணை இயக்குனரிடம் 94439 00251 என்ற எண்ணில் புகார் செய்யலாம். கூடுதல் விலைக்கு விற்கும் உரக்கடைகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**உரக்கடைகளின் உரிமம் ரத்து**

தேனி: தேனியில் உள்ள பி.எஸ்.வேலுச்சாமி கவுடர் அன் சன், மற்றும் விஜயா ஏஜன்ஸியில் விவசாய தரக் கட்டுப்பாடு உதவி இயக்குனர் சுந்தரம், விவசாய அலுவலர் ராஜ்மனோகரன் ஆகியோர் ஆய்வு செய்தனர். இங்கு உரமூடைகள் அதிக விலைக்கு விற்றது தெரியவந்தது.

இந்த உரக்கடைகளின் உர உரிமம் தற் காலிகமாக ரத்து செய்யப்பட்டு மேல்நடவடிக்கை தொடரப்பட் டுள்ளது. அனைத்து உரக்கடைகளிலும் சோதனை தொடரும் என விவசாய உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**.பழநியில் மாம்பழ வரத்து குறைவு கடந்த ஆண்டை விட விலை அதிகம்**

பழநி: பழநியில் கடந்த ஆண்டை விட இந்தாண்டு மாம்பழ வரத்து குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது.பழநியில் சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் மாந்தோப்புகள் உள்ளன. மார்ச் முதல் ஜூலை வரை சீசனாகும்.

கடந்த ஆண்டு மாம்பழ விளைச்சலில் நான்கில் ஒரு பங்கு தான் இந்தாண்டு உள்ளது. இதனால் விலை அதிகரித்துவிட்டது.விலை விபரம்(ரூ. ஒரு கிலோ) (கடந்தஆண்டு விலை அடைப்புக்குறிக்குள்): கல்லாமை-ரூ.20 (6), செந்தூரம்-ரூ.30(20), அல்போன்சா-ரூ.40 (30), மல்கோவா-ரூ. 60 (40), இமாம்பசந்த்-ரூ.90 (60).

**தக்காளி விலை கடும் உயர்வு**

ஒட்டன்சத்திரம்: முகூர்த்த சீசன் தொடங் கியதால் ஒட்டன்சத்திரத்தில் தக்காளி விலை பெட்டிக்கு 120 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. ஒட்டன்சத்திரம் மார்க் கெட்டில் தக்காளி உள் ளிட்ட காய்களின் விலை ஒரே நாளில் கிடுகிடு வென உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் 14 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ஒன்று 180 ரூபாய் என்ற அளவில் விற்பனையானது.

நேற்று இதன் விலை பெட்டிக்கு 120 ரூபாய் வரை அதிகரித்து 300 ரூபாய்க்கு விற்றது. மொத்த விற்பனையில் ஒரு கிலோ 12 ரூபாய் 85 காசுக்கு விற்ற ஒரு கிலோ தக்காளி நேற்று 21 ரூபாய் 45 காசுக்கு விற்பனையானது. தெத்துப்பட்டி,கன்னிவாடி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தக்காளி வரத்து குறைவாக உள்ளதும் விலை ஏற்றத்திற்கு காரணமாக கூறப்படுகிறது.

இதேபோல் ஒரு கிலோ 11 ரூபாய்க்கு விற்று வந்த முருங்கைக்காய் நேற்று 2 ரூபாய் அதிகரித்து 13 ரூபாய்க்கு விற்றது. கொடைக்கானலில் காய்கறி வரத்து குறைந்ததால், விலை உயர்ந் துள்ளது. கொடைக்கானலில் பீட்ரூட், முட்டைகோஸ், உருளைக்கிழங்கு விவசாயம் செய்யப்படுகிறது. பணப்பயிரான பூண்டு அதிகளவில் பயிர் செய்யப் பட்டுள்ளதால், காய்கறி விளைச்சல் குறைந்துள்ளது.

மலைக்காய்கறிகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. நேற்று கொடைக்கானல் வாரச்சந்தையில் கிலோ ஒன்றிற்கு நூல்கோல்-40, காரட்ரூ.33, பஜ்ஜி மிளகாய் ரூ.50, முள்ளங்கி ரூ.22க்கு விற்கப்பட்டது

**பருவமழை மாற்றத்தால் மாம்பழம் வரத்து குறைந்தது: ருசி இல்லாத ஆந்திர மாம்பழம் இறக்குமதி**

மதுரை:பருவமழை மாற்றத்தின் எதிரொலியாக கோடையில் வர வேண்டிய மாம்பழ வரத்து மதுரையில் இந்தாண்டு குறைந்தது. ஆந்திராவில் இருந்து இறக்குமதி செய்யப் படும் ருசி இல்லாத மாம்பழம் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. புவி வெப்பமயமாகி வருவதன் எதிரொலியாக, பருவமழை பொய்த்து வருகிறது. இதனால் கோடையில் காய்த்து குலுங்க வேண்டிய மாம்பழ வரத்து மதுரையில் இந்தாண்டு குறைந்தது. வெப்பத்தை தாங்க முடியாமல் இலைச்சுருள் நோய் தாக்குதலும் ஏற்பட்டுள்ளது.

ஆந்திர மாம்பழம் இறக்குமதி: கோவை, திருப்பூர், ஈரோட்டை அடுத்து மதுரையிலும் நிலத்தடி நீர் அதல பாதாளத்திற்கு சென்று விட்டது. பாசனத்துக்கு தேவையான தண்ணீர் இல்லாததால் மதுரையில் மா மரங்கள் கருகி வருகின்றன. பூக்கள் உதிர்வு மற்றும் வளர்ச்சியின்றி பிஞ்சிலேயே காய்கள் உதிர்கின்றன.

மாம்பழம் விளைச்சல் இல்லாததால், ருசி குறைந்த ஒட்டுண்ணி வகையை சேர்ந்த ஆந்திர மாம்பழங்கள் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இதை அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர்.சீசன் பழங்கள் கிடைக்குமா: சீசனுக்கு ஏற்ப உற்பத்தியாகும் பழங்களை சாப்பிட வேண்டும் என கூறுவர். புவி வெப்பமயமாகி வருவதால் வரும் காலங்களில்சீசனுக்கு ஏற்ப பழங்கள் விளையும் என எதிர்பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**மீன் வளர்க்க மானியம்**

மதுரை:மீன்வளத்துறை மூலம் மீன்உற்பத்தியை அதிகரிப்பது குறித்து மதுரை கலெக்டர் காமராஜ் வெளியிட்ட அறிக்கை : தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தில் 176 பொதுப்பணித் துறை கண்மாய்களில், மூன்றாண்டு கால குத்தகை அடிப்படையில் மீன்வள உரிமை விடப்படுகிறது. மதுரை மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் மீன்வளர்ப் போருக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன.

புதிய குளங்கள் அமைக்க எக்டேருக்கு 60 ஆயிரம் வரை மானியம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 75 ஆயிரம் ரூபாய் மானியம். குளங்களை சீரமைத்தல் மற்றும் புதுப்பிக்க எக்டேருக்கு 15 ஆயிரம் ரூபாய், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு 18 ஆயிரத்து 750 ரூபாய் மானியம். மீன் வளர்ப்புக்கு தேவையான பொருட்கள் வாங்க, எக்டேருக்கு 10ஆயிரம், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு 12ஆயிரத்து 500 ரூபாய் மானியம்.

நன்னீர் இறால் வளர்ப்பில் உள்ளீட்டுப் பொருள் வழங்க, எக்டேருக்கு 36 ஆயிரம், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு 45 ஆயிரம் ரூபாய் மானியம். மீன்குஞ்சு பொறிப்பகம் அமைக்க, எக்டேருக்கு 1.2 லட்ச ரூபாய், மீன் உணவு தயாரிக்க, 1.5 லட்ச ரூபாய் மானியம். நவீன மீன்வளத் தொழில் நுட்பங்களில் மீன் வளர்ப்போருக்கு இலவச மீன்வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் மீன்வளர்ப்போர் மேம் பாட்டு முகமை கட்டுப்பாட்டில் உள்ள 34 கண்மாய்களின் மீன்வள உரிமை ஐந்தாண்டு கால குத்தகை அடிப்படையில் விடப் படுகிறது. மீன்வளர்ப்பு குறித்த விவரங்களுக்கு, மதுரை, பேச்சியம்மன் படித்துறை ரோட்டில் உள்ள மீன்வள உதவி இயக்குனர் அலவலகத்தை, 0452 - 234 7200ல் தொடர்பு கொள்ளலாம்.

**மழைக்கு மரங்கள் சேதம் தோட்டக்கலை ஆய்வு**

பாலமேடு:பாலமேடு பகுதியில் சில நாட்களுக்கு முன் திடீரென சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. ராமகவுண்டன்பட்டியில் பப்பாளி மரங்கள் வேறுடன் சாய்ந்தன. தினமலர் இதழில் இச் செய்தி வெளியானதை தொடர்ந்து தோட்டக்கலைத் துறையினர் ஆய்வு அறிக்கை அளிக்க கலெக்டர் உத்தரவிட்டார்.

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் விஜயகுமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜேந்திரன். முத்துக்குமரன் அடங்கிய குழுவினர் ஆய்வு செய்தனர். பப்பாளி தவிர வாழை, சேந்தமங்கலம், பாறைப்பட்டி, சரந்தாங்கி பகுதியில் மா மரங்கள் சாய்ந்ததும் ஆய்வில் தெரிய வந்தது. பாதிப்புக்கு நிவாரணம் வழங்க கோரி பலர் மனு கொடுத்துள்ளனர்.

**கிஷான்' அட்டைகள் வழங்க விவசாய துறை நடவடிக்கை**

ராஜபாளையம்: விவசாயிகள் கடன் பெறுவதை எளிதாக்கும், "கிஷான்' கார்டுகளை வழங்கும் நடவடிக்கையில் விவசாயத்துறை மும் முரமாக ஈடுபட்டுள்ளது. விவசாயிகள் கூட்டுறவு சங்கம் மூலம், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பயிர் கடனை பெற்று வருகின்றனர். இதற்கான வழிமுறைகள் கடினமாக இருப்பதால் விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

விவசாயிகள் கடன் பெறுவதை எளிதாக்கும் வகையில், "கிஷான்' அட்டைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இந்த அட்டையை பெற்றவர்கள், மூன்று ஆண்டுகளுக்கு, பயிர் சாகுபடி காலத்திற்கு முன், வங்கிகளை

அணுகி எளிதாக கடன் பெற முடியும். எந்தவிதமான அடமானமும் வைக்கத் தேவையில்லை. ராஜபாளையம் வட்டாரத்தில் 1,200 விவசாயிகள் தற்போது வரை விண்ணப்பித் துள்ளனர்.

கடன் அட்டை பெற விரும்புவோர், ராஜபாளையம் விவசாய உதவி இயக்குனர் அலுவலகத்திலிருந்து விண்ணப்ப படிவத்தை பெற்று பூர்த்தி செய்து, 10(1) அடங்கல் நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை இணைத்து விண்ணப்பிக்கலாம். எந்தவித கட்டணமும் இல்லை. இத்திட்டத்தில் சேருவோர், வங்கிகளில் கடன் நிலுவை இல்லாதவராக இருக்க வேண்டும்.

**வானிலை பயிர் பாதிப்பு ரூ.28 லட்சம் இழப்பீடு**

விருதுநகர்:பருவநிலை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட 3,724 விவசாயிகளுக்கு, வானிலை பயிர் காப்பீடு திட்டத்திலிருந்து இழப்பீடு தொகை வழங்க, 28 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது. 2009 ராபி பருவத்தில் மக்காசோளம், பருத்தி, எள், சூரியகாந்தி, கடலை ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. வானிலை மாற்றத்தால் இப்பயிர்கள் சேதமடைந்தன.

இந்த பயிர்களுக்கு மாவட்டத்தில் காப்பீடு செய்த 9,338 விவசாயிகளுக்கு 6.19 கோடி ரூபாய் இழப்பீடு தொகை வழங்க தொடக்க கூட்டுறவு சங்கங்கள் சென்னை வானிலை பயிர் காப்பீடு அலுவலகத்திற்கு பரிந்துரை செய்தன. இதில் 39 சங்கங்களுக்கு, 28 லட்சத்து 6 ஆயிரத்து 592 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை அந்தந்த சங்கங்களின் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது.

கடன் பாக்கியுள்ள விவசாயிகளுக்கு அவர்களின் கணக்கில் வரவு வைக்கவும், பாக்கியில்லாத விவசாயிகளுக்கான இழப்பீடு தொகைக்கான காசோலையை, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளிலிருந்து தொடக்க கூட்டுறவு வங்கிகள் வாங்கி வழங்க வேண்டும்.

தொகை வழங்காமலோ, தவறுகள் நேர்ந்தாலோ அந்தந்த தொடக்க கூட்டுறவு சங்கங்களின் செயலாளரே பொறுப்பாவார். வழங்கப்பட்ட தொகை குறித்து பயன்பாட்டு சான்றும், திட்ட அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என இணைப்பதிவாளர் ரவிக் குமார் தெரிவித்துள்ளார்.

**தோட்டப்பயிர் விவசாயிகளுக்கு 3 நாள் பயிற்சி வகுப்பு; 2 நாள் "டூர்'**

காங்கயம் : தோட்டக்கலைத்துறை சார்பில், காங்கயம், வெள்ளகோவில், குண்டடம் பகுதியைச் சேர்ந்த 150 விவசாயிகளுக்கு தோட்டப்பயிர் சாகுபடி குறித்த மூன்று நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களை, இரண்டு நாள் சுற்றுலா அழைத்துச்செல்ல தோட்டக்கலைத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

காங்கயம் தோட்டக்கலை உதவி இயக்குனர் தமிழ்செல்வன் தெரிவித்ததாவது: தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் மூலம் காங்கயம், வெள்ளகோவில், குண்டடம் வட்டாரங்களைச் சார்ந்த 150 விவசாயிகளுக்கு, வரும் 27ம் தேதி முதல் 29ம் தேதி வரை மூன்று நாட்கள், காய்த்ரி ஓட்டலில் தோட்டப்பயிர் சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மற்றும் தோட்டக்கலை துறை உயரதிகாரிகள் தோட்டக்கலை பயிர் சாகுபடி பற்றி பயிற்சி அளிக்கின்றனர். இப்பயிற்சியில் பங்குபெற, காங்கயம், வெள்ளகோவில், குண்டடம் பகுதியில் இருந்து தலா 50 விவசாயிகள் வீதம் மொத்தம் 150 விவசாயிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

பயிற்சிக்கு பின், விவசாயிகளை சுற்றுலா அழைத்துச்செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொடைக்கானல், பெரியகுளம், சின்னமனூருக்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். பெரியகுளம், கொடைக்கானலில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கல்லூரி உள்ளது. சின்னமனூரில் மா, வாழை சாகுபடி பற்றிய நேரடி விளக்கம் அளிக்கப்படும்.

காங்கயம், வெள்ளகோவில், குண்டடம் பகுதியில் விவசாயிகள், மா, வாழை, நெல்லி, மஞ்சள் சாகுபடி செய்கின்றனர். அவ்விவசாயிகளுக்கு இப்பயிற்சி வகுப்பும், சுற்றுலாவும் பயனுள்ளதாக இருக்கும். பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ள விவசாயிகள், வட்டார தோட்டக் கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்புகொண்டு, பெயரை பதிவு செய்யலாம். இவ்வாறு, தமிழ்செல்வன் தெரிவித்தார்.

**எள்ளு அறுவடை பணிகள் தீவிரம்**

உடுமலை : உடுமலை பகுதியில் எள்ளு அறுவடை பணிகள் தீவிரமாக நடக்கின்றன.உடுமலை அருகே தளி மற்றும் சுற்றுப்பகுதிகளில், மானவாரிப்பயிரான எள்ளு சாகுபடி செய்யப்பட்டுள் ளது. விவசாயிகள் கூறியதாவது: தளி மற்றும் சுற்றுப்பகுதிகளில், சாகுபடி செய்யப்பட்ட 90 நாள் பயிரான எள்ளு அறுவடை பணிகள் தீவிரமாக நடக்கின்றன. எள்ளு சாகுபடிக்கு ஏக்கருக்கு 7,000 ரூபாய் வரை செலவாகிறது. ஏக்கருக்கு 100 கிலோ மூட்டை, நான்கு மூட்டை வரை மகசூல் கிடைத்தது. தற்போது, போதிய மழை இல்லாதது உள்ளிட்ட காரணங்களினால் மகசூல் குறைந்துள்ளது. இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**மண் புழு உரம் தயாரிக்க விவசாயிகள் ஆர்வம்**

திருப்பூர் : திருப்பூர் பகுதியில், மண் புழு உரம் தயாரிக்க விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

தொழில் வளர்ச்சி காரணமாக, திருப்பூர் சுற்றுப்பகுதிகளில் விவசாயம் குறைந்து விட்டது. அதிகமான விளைநிலங்கள், நிறுவனங்களாகவும், குடியிருப்புகளாகவும், காலிமனைகளாகவும் மாறி விட்டன. முழுமையாக இயற்கை முறையை பயன்படுத்தி விளைச்சல் எடுப்பவர்கள் மிகவும் குறைவு. இயற்கை உரங்களில் முக்கிய இடத்தை பிடிப்பது, மண்புழு உரம்; மண்புழு உரத்தை விவசாயிகள் எளிதில், தாங்களாகவே தயார் செய்து கொள்ள முடியும்.

தென்னை, வாழை, சோளம், காய்கறிகள் உள்ளிட்ட அனைத்து பயிர்களுக்கும் மண்புழு உரத்தை பயன்படுத்தி மகசூலை அதிகரிக்க முடிகிறது. வேளாண் துறை சார்பில், மண்புழு உரம் தயாரிப்பதற்கான மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. போயம்பாளையம், கணபதிபாளையம், ராக்கியாபாளையம் உள்ளிட்ட இடங்களில், வேளாண் துறை மானியத்துடன் மண் புழு உரத்திடலை விவசாயிகள் அமைத்துள்ளனர். மக்கும் குப்பையை பயன்படுத்தி மண்புழு உரம் தயார் செய்கின்றனர்.

திருப்பூர் மாநகராட்சி, நல்லூர், 15 வேலம்பாளையம் நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் விவசாயிகளுடன் இணைந்து மண் புழு உரம் தயாரிப்பதில் ஈடுபடலாம். ஊராட்சி பகுதிகளில் அதிகமான விவசாயிகள் இருப்பதால், அவர்களுக்கு உதவ முடியும். குடியிருப்புகளில் உருவாகும் குப்பைகள் குறைந்தளவில் இருப்பதால் எளிதில் கையாள முடியும். ஒரு உரத்திடலுக்கு சுமார் 45 நாட்களுக்கு ஒருமுறையே மக்கும் குப்பைகள் தேவை என்பதால், பல விவசாயிகளை ஈடுபடுத்தலாம்.

மண் புழு உரம் தயாரிக்கும் போயம்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி ஜெகனாதன் கூறியதாவது: வேளாண் துறையிடம் 50 சதவீதம் மானியம் பெற்று, மண்புழு உரத்திடல் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 120 அடி நீளம், மூன்று அடி அகலம்,

2.5 அடி உயரத்தில் கான்கிரீட் தளம் கொண்டு உரத்திடல் கட்டப்பட்டுள்ளது. நான்கு சதுர அடி பரப்பளவில் ஒரு கிலோ மண் புழுக்கள் விட வேண்டும். குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாகவே புழுக்கள் விடப்பட்டன; 45 நாட்களில் 12 ஆயிரம் கிலோ உரம் கிடைத்தது. உரம் தயாரிப்பிற்கு ஒரு பணியாளர் போதுமானது.

உரம் தயார் செய்வதற்கு சாணம், மக்கும் குப்பை, கழிவுகளை பயன்படுத்தலாம். சாணத்தை பயன்படுத்தும் போது கவனமாக இருக்க வேண்டும். உரத்திடலில் புதிய சாணத்தை போடக்கூடாது; சாணத்தில் காஸ் ஏற்படுவதால், புழுக்கள் இறந்து விடும். தென்னை, சோளம், முருங்கை உள்ளிட்ட பயிர்களுக்கு உரம் வைக்கப்படுகிறது. செயற்கை உரங்களை விட, ஒரு மடங்கு அதிகமான மகசூல், நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. நகராட்சி, ஊராட்சி அமைப்புகள் குப்பைகளை தரம் பிரித்து கொடுத்தால், விவசாயிகள் எளிதில் மண்புழு உரம் தயாரிக்கலாம். இவ்வாறு, ஜெகனாதன் கூறினார்.

திருப்பூர் வேளாண் துறை உதவி இயக்குனர் செரீப் கூறுகையில், "" மண்புழு உரம் தயாரிக்க, துறை சார்பில் ஆண்டுதோறும் மானியம் அளிக்கப்படுகிறது. சாணம், தட்டு உள்ளிட்ட விவசாயம் சார்ந்த கழிவுகள், மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயார் செய்யலாம்.

கோவை வேளாண் பல்கலை மூலம், உரம் தயாரிப்பிற்கான பயிற்சி வழங்கப்படுகிறது. திருப்பூர் பகுதியில் அதிக விவசாயிகளுக்கு பயிற்சி தேவைப்பட்டால், பயிற்சிக்கான ஏற்பாடு செய்யலாம். உள்ளாட்சி அமைப்புகள் மக்கும் குப்பைகளை பிரித்து கொடுத்தால் மட்டுமே விவசாயிகள் மண்புழு உரம் தயாரித்தல் சாத்தியப்படும்," என்றார்.

அதிகளவிலான விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேளாண் துறையும், குப்பைகளை தரம் பிரித்து கொடுக்க உள்ளாட்சி அமைப்புகளும் முன்வந்தால், இயற்கை விவசாயம் அதிகரிக்கும்; அதே வேளை குப்பை குவியலும் குறையும்.

**55 ஆயிரம் டன் கரும்பு அரவை : தனி அலுவலர் தகவல்**

உடுமலை : ""அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், நவீன கரும்பு வெட்டும் இயந்திரம் மற்றும் கரும்பு சோகையை துகள்களாக்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்படும்," என ஆலை தனி அலுவலர் தெரிவித்தார்.

உடுமலை அருகே உள்ள கிருஷ்ணாபுரம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகள் கூட்டம் நடந்தது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்க தலைவர் வேலுசாமி, பொது செயலாளர் எம்.எல்.ஏ., சண்முகவேலு முன்னிலை வகித்தனர்.

ஆலை தனி அலுவலர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்து பேசியதாவது: அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2009-10ம் ஆண்டு அரவை, ஏப்., 3ல் துவங்கி, மொத்த கரும்பு அரவை இலக்கான 1.40 லட்சம் டன்களில், இதுவரை 55 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. சர்க்கரை சத்து 9.47 சதவீதமாக உள் ளது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒப்பந்தமிட்ட 47 ஆயிரம் டன் கரும்பும், பிற ஆலைகளின் கரும்பு 6,600 டன் அரவை செய்யப் பட்டுள்ளது.

தற்போது வெளி ஆலை கட்டுப் பாட்டு பகுதிகளில் இருந்து கரும்பு எடுப்பது நிறுத்தப்பட்டு, அமராவதி சர்க்கரை ஆலை கரும்பு மட்டுமே அரவைக்கு எடுக்கப்படுகிறது. கரும்பு முதிர்ச்சிப்படி, கரும்பு வெட்டும் உத்தரவு தாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு, அறுவடை செய்யப் படுகிறது. இந்தாண்டு சர்க்கரை கட்டுமானம் 10 சதவீதமாக இருக்க நடவடிக்கைகள்

எடுக்கப்படுகிறது. விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய் யப்படும் கரும்புக்கு உரிய தொகை உடனடியாக வழங்கப்படுகிறது.

அடுத்தாண்டு கரும்பு டன்னுக்கு 2,000 ரூபாய் என தமிழக அரசு விலை நிர்ணயித்துள்ளது. ஆலையில் ஒப்பந்த குறியீடான 6,000 ஏக்கர் கரும்பு பதிவு இலக்கை எட்ட, ஆலை அங்கத்தினர்கள் கரும்பு பதிவு செய்து ஒத்துழைக்க வேண்டும். ஆலை நிர்வாகம் கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு தேவையான புதிய ரக கரும்பு விதைகள் வழங்கவும், பயிர்க்கடன் வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாறு, தனி அலுவலர் பேசினார்.

விவசாயிகள் சார்பில், "ஜூன் மாதத் தில் கரும்பு வெட்டும் இயந்திரம், கரும்பில் சோகையை துகள்களாக் கும் இயந்திரம் உட்பட நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட உள் ளது. இதுகுறித்து செயல் விளக்க கூட்டங்கள் அனைத்து பகுதியிலும் நடத்துவதோடு, இயந்திரங்களின் செயல்பாடுகளை கரும்பு வயல்களில் மேற்கொள்ள வேண்டும்' என கோரிக்கை விடுத்தனர். இதற்கு பதிலளித்த ஆலை நிர்வாகிகள், நவீன இயந்திரங்கள் குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்படும் என்றனர்.

**தேங்காய் பறிக்க ஆளில்லை; விவசாயிகள் தவிப்பு**

பல்லடம் : மரம் ஏறும் தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக, பல்ல டம் மற்றும் சுல்தான் பேட்டை பகுதியில் தேங்காய் பறிப்பு கூலி, கடந் தாண்டை விட, 50 சதவீதம் உயர்ந்தது. கூலி உயர்ந்திருந்தாலும், தொழிலாளர் பற்றாக்குறை தீராததால், தென்னை விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

பல்லடம், சுல்தான்பேட்டை, ஜல்லிப்பட்டி, அப்பநாயக்கன் பட்டி, இடையர்பாளையம், பாப்பம் பட்டி, செலக்கரிச்சல், வடவள்ளி, வதம்பச்சேரி, வடவேடம் பட்டி, பூராண்டம்பாளையம், செஞ் சேரிப்புத்தூர் உட்பட பல இடங்களில் தென்னை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. எட்டு லட்சத்திற்கும் அதிகமான தென்னை மரங்கள், இப்பகுதிகளில் உள்ளன. இப்பகுதியில் விளைவிக்கப்படும் தேங்காய், இளநீர், கோவை, திருப்பூர், திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் கேரள பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. கடந்த இரு மாதங்களாக, வெப்பம் கடுமையாக இருப்பதால் இளநீர் வியாபாரம் "சூடு'பிடித்துள்ளது.

பல்லடம், செஞ்சேரியில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் மையத்தில், இரு வாரங்களுக்கு முன் கொப்பரை கொள்முதல் மீண்டும் துவங்கியுள்ளதால், கொப்பரைக்கும் கிராக்கி நிலவி வருகிறது. இந்நிலையில், பல்லடம், சுல்தான் பேட்டை வட்டாரங்களில் தென்னந் தோப்புகளில் தேங்காய், இளநீர் பறிப்புக்கு மரம் ஏறும் தொழிலாளர்கள் பற்றாக் குறை கடுமையாக உள்ளது. குட்டை ரக தென்னை மரங்களில் விளைந்துள்ள தேங்காய், இளநீர் களை விவசாயிகள் பலர் தாங்களாகவே கொக்கிபோட்டு, மரத்தின் கீழ் இருந்தவாறு மிக சிரமத்துடன் பறித்து வருகின்றனர். மிக உயரமாக வளர்ந்துள்ள தென்னை மரங்களில் உள்ள தேங்காய்கள், இளநீர்களை, விவசாயிகளால் பறிக்க முடிவதில்லை.

பல்லடம் பகுதியில் நூற்றுக் கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள் பற்றாக்குறையால் மரத் தில் இருந்து முற்றி விழும் தேங் காய்களை மட்டும் தற்போது தங்களது தோப்புகளில் சேகரித்து வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர். வசதியான தென்னை விவசாயிகள் சிலர், உடுமலை, பெரியபட்டி, பூளவாடி பகுதி களில் இருந்து மரம் ஏறும் தொழிலாளர்களை அதிக கூலி கொடுத்து அழைத்து வருகின்றனர்.

சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள், தொழிலாளர் பற்றாக்குறை, கூலி உயர்வு காரணமாக முழு மையாக தோப்புகளில் காய்களை பறிக்க முடியாமல் தடுமாறி வருகின்றனர். தொழிலாளர் பற்றாக் குறையால், 40 நாளைக்கு ஒருமுறை தென்னை மரத்தில் தேங் காய் வெட்டு (பறிப்பு) என்பது, தற்போது 50 நாளாக அதிகரித் துள்ளது.

கடந்தாண்டு 100 தேங்காய் அல்லது இளநீர் பறிப்புக்கு 30 ரூபாய் கொடுக்கப்பட்ட கூலி, இந் தாண்டு 45 ரூபாயாக உயர்ந் துள்ளது. கடந் தாண்டைவிட இந்தாண்டு பறிப்பு கூலி 50 சதவீதம் உயர்ந்திருந்தாலும், மரம் ஏறும் தொழிலாளர்கள் பற்றாக் குறை, சிறு, குறு தென்னை விவசாயிகளை கடுமையாக பாதிப்படையச் செய்துள்ளது.

**சீசன் துவங்கியும் விலையில் மாற்றம் இல்லை: மக்காச்சோள விவசாயிகள் ஏமாற்றம்**

உடுமலை : உடுமலை மற்றும் குடிமங்கலம் பகுதியில் பி.ஏ.பி., மற்றும் கிணற்று பாசனத்திற்கு பல ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது.

பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு பயிரிடப்பட்ட மக்காச்சோளம் ஜனவரியில் அறுவடை செய்யப்பட்டது. அறுவடை துவங்கியதும் விலை வீழ்ச்சியடைந்தது. 100 கிலோ மூட்டை 850 ரூபாயிலிருந்து 910 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டது. தொழிலாளர் பற்றாக்குறை, உரத்தட்டுப்பாடு பிரச்னைகளால் சாகுபடி செலவு அதிகரித்து, விலை குறைந்திருந்ததால் விவசாயிகள் வேதனையடைந்தனர்.

ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் சோளத் தையும், விளைநிலங்களில் தாளை பிரிக்காமல் கதிராகவும் இருப்பு வைத்தனர். உடுமலை, பெதப்பம்பட்டி ஒழுங்கு முறை விற்பனை கூட குடோன்கள் மக்காச்சோள மூட்டைகளால் நிரம்பி காணப்பட்டன. மார்ச் மாதத்தில் வெளிமாநில வரத்து குறைந்து விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், பல மாதங்களாகியும் விலையில் பெரிய மாற்றம் இல்லை.

கோழிப்பண்ணை நிறுவனங்கள் உற்பத்தியை குறைத்தது, ஏற்றுமதி வாய்ப்புகள் இரண்டு ஆண்டுகளாக முடங்கி கிடப்பது ஆகிய காரணங்களால் விலை அதிகரிக்கவில்லை. தற்போது, மக்காச்சோளத்தின் விலை 910 ரூபாய் வரை உள்ளது. இந்நிலையில், பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்திற்கு பயிரிடப்பட்ட மக்காச்சோள பயிர்கள் அறுவடைக்கு தயாராகி விரைவில் பணிகள் துவங்க உள்ளது. இதனால், வெளிமாநில வரத்தோடு, உள்ளூர் வரத்தும் சந்தைக்கு பல மடங்கு அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. வரத்து பல மடங்கு அதிகரிக்கும் நிலையில் விலையேற்றத்திற்கு குறைந்தளவே வாய்ப்புகள் இருப்பதால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பா ளர் சுப்புராமன் கூறியதாவது: குடிமங்கலம் பகுதியில் பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு பயிரிடப்பட்ட மக்காச் சோளம் அதிகளவு இருப்பு வைக்கப்பட்டது. சில மாதங்களாக விலையில் மாற்றம் இல்லாததால் விவசாயிகள் விற்பனைக்கு முன்வரவில்லை. ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் 6 ஆயிரம் மூட்டை மக்காச்சோளம் இருப்பு உள்ளது. அடுத்த மாதம் புதிய வரத்து இருக்கும் வாய்ப்புள்ளது. போதிய விலை கிடைக்கும் வரை இருப்பு வைக்க திட்டமிட்டுள்ளனர், என்றார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***சாலீஸ்பரி கூட்டுறவு தொழிற்சாலையில் உற்பத்தி திறனை அதிகரிக்க நடவடிக்கை தனி அலுவலர் தகவல்***

---

*கடலூர், மே.24–*

கூடலூர் சாலீஸ்பரி கூட் டுறவு தொழிற்சாலையில் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது என தொழிற்சாலை தனி அலுவலர் கல்யாண சுந்தரம் தகவல் தெரிவித்துள்ளார்.

டீ சர்வ் ஏல மையம்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை கடந்த சில மாதங்களாக உயர்ந்திருந்த நிலையில் கடந்த சில நாட்களாக தேயிலை விலை குறைந்து வருகிறது.

இன்கோ சர்வ் மையத்துடன் வைத்திருந்த ஒப்பந்த காலத்தை டீ சர்வ் ஏல மையம் முடித்து கொண்டதால் தேயிலை விலை மீண்டும் வீழ்ச்சி அடைந்து வருகிறது என்று கூறப்படுகிறது. இதனால் மீண்டும் டீ சர்வ் ஏல மையம் மூலம் தேயிலை கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கூடலூர் சாலீஸ்பரி கூட்டுறவு தேயிலை தொழிற் சாலையில் 1,500 சிறு விவசாயி கள் உறுப்பினர்களாக உள்ள னர். இதனால் விவசாயிகள் தினமும் வழங்கக்கூடிய பச்சை தேயிலையை கோட்டா முறையில் தொழிற்சாலை நிர்வாகம் பெற்று வருகிறது. இதன் காரணமாக தொழிற்சாலைக்கு பச்சை தேயிலை வழங்கும் சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்ற னர்.

தரமான தேயிலை தூள்

இது குறித்து கூடலூர் சாலீஸ்பரி கூட்டுறவு தொழிற் சாலை தனி அலுவலர் கல்யாண சுந்தரம் கூறியதா வது:–

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் சாலீஸ்பரி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் பச்சை தேயிலை அதிகமாக கொள் முதல் செய்து தரமான தூள் தயாரிக்கப்பட்டு வருகிறது. தொழிற்சாலையின் அங்கத்தினர்கள் பாதிக்கப்படாத வகையில் கோட்டா முறை செயல்படுத்த பட்டு வருகிறது.

தேயிலை விலை குறைந்து விடாமல் இருக்க இன்கோ சர்வ் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது. தற்போது மின்தட்டுப் பாடு அதிகளவு உள்ளதால் உற்பத்தி திறன் பாதிக்கப் படுகிறது. இதனால் ஜென ரேட்டர்கள் உதவியுடன் உற்பத்தி செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உற்பத்தி திறன் அதிகரிக்க நடவடிக்கை

சிறு விவசாயிகள் கொடுக் கக்கூடிய பச்சை தேயிலைகள் அனைத்தையும் கொள்முதல் செய்யும் வகையில் சாலீஸ்பரி தொழிற்சாலையில் உற்பத்தி திறனை அதிகரிக்க நடவ டிக்கை எடுக்கப்படும். தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க தரமான இலையை விவசாயிகள் வழங்க வேண்டும்.

அப்போது தான் தரமான தூள் தயாரிக்கப்படும். விலையும் அதிகரிக்கும். எனவே விவசாயிகள் தரமான பச்சை தேயிலையை தொழிற் சாலைக்கு வழங்கி ஒத்துழைப்பு கொடுக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு கூடலூர் சாலீஸ்பரி கூட்டுறவு தொழிற் சாலை தனி அலுவலர் கல்யாண சுந்தரம் தெரிவித்தார்.